Reg. M. 2330. "SIDDHANTHAM" Vol. 17. No. 5

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு

மலர் 17 | தாரண ஹு வைகாசிமீ 1944ஹு மேமீ | இதழ் 5

பத்திராசிரியர் :

திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், பி. ஏ., பி. எல்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்
51, தென்கூர் செல்வ விநாயகர் கோயில் தெரு,
மயிலாப்பூர், சென்னை

ஆண்டுச் சந்தா ரூபா 2 தனிப்பிரதி அணா 3

## கோகழி

[பத்திராசிரியர்]

கோகழி என்ற தலம் எங்குளது ? மாணிக்கவாசக சுவாமிகள் இத்தலத்தில் மிகுந்த ஈடுபாடுடையவர். திருவாசகத்திற் பல இடங்களில் இத்தலத்தின் குறிப்பு வருகின்றது. சிவபுராணம் மூன்றும் அடியில் "கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க" என்றும், போற்றித் திருஅகவல் 157-வது அடியில் "கோகழி மேவிய கோவே போற்றி" என்றும், குயிற்பத்தில் 6-வதுபாட்டில் "கொம் ... குயிலே கோகழி நாதனைக் கூவாய்" என்றும், பண் ... தற்பாட்டில் "கோகழிஎங் கோமாற்கு" என்றும், ... ல் "நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் ... ழ கோகழிக் கரசை" என்றும் இத்தலக் குறிப்பு ... புலவர்கள் கோ + கழி என்று பிரித்து ஆவி

துறை யென்றும் பெருந்துறை யென்றும் பொருள் கொண்டனர். கோ = ஆ, பெரிய; கழி = துறை என்பது அவர்கள் கருத்து. கோகழி என்ற பெயரோடு இன்றும் ஓர் ஊர் கூறப்படுமாயின், இவ்வாறு பிரித்து ஆவடுதுறைக்கும் பெருந்துறைக்கும் வலிந்து பொருத்த வேண்டியதில்லை. திருவாசகத்துள் யாண்டும் ஆவடுதுறை கூறப் படவில்லை. வெளிப்படையாக அவ்வாறு கூறப்படாத ஒரு தலத்தை இவ்வாறு வலிந்து கோடல் எற்றுக்கு? மேற்கூறிய பண்டாய நான் மறை ஐந்தாம் பாட்டில் " நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் போயகல, எண்ணிஎழு கோகழிக் கரசை" என்ற பகுதியை நோக்கி ஞல், பெருந்துறையும் கோகழியும் அடுத்தடுத்து முதலடி இரண் டாவதடிகளில் வருவதால், இரண்டும் ஒரே தலம் என்று கூறு வதற்கு மிகுந்த துணிவு வேண்டும். மேலும் பெருந்துறை என்ற பெயர் திருவாசகத்துள் சுமார் நூற்றுக்கு மேலான இடங்களில் வருவதால், மேற்கூறிய ஐந்திடங்களில் மட்டும் இவ்வாறு மாற்றிக் கூறப்பட வேண்டிய அவசியமென்ன? சிவபுராணத்துள் மூன்றும் அடியில் பெருந்துறை என்று வெளிப்படையாகக் கூருமல் கோகழி என்று மறைத்துக் கூறவேண்டிய நெருக்கடியும் அவசியமும் மாணிக்கவாசகருக்கு ஏற்பட்டதென்று ஏன் கொள்ளவேண்டும்? இவ்வாறு பல வழிகளிலும் சிந்தித்தால், கோகழி என்ற பெயரோடு இன்றும் வழங்கப்படும் ஓர் ஊரையே மாணிக்கவாசகர் குறிக்கிறுர் என்ற முடிபுக்கே நடுநிலையில் நிற்போர் ஒவ்வொருவரும் வருவர். இத்தலம் எங்குளது?

கன்னர தேசத்தில் பல்லாரி ஜில்லாவில் ஹடகள்ளி தாலுகா வில் கோகழி என்ற தலம் உள்ளது. இது ஹொஸப்பேட் (Hospet) ரயில்வே ஸ்டேஷனிலிருந்து 32 மைல் தொலைவிலுள் ளது. இவ்வூரிலும் இதைச் சுற்றிலுமுள்ள கல்வெட்டுக்களிலிருந்து இவ்வூரின் பெயர் கோகழி என்பது விளங்குகின்றது. இன்றும் இவ் வூர் இப்பெயரால் அழைக்கப்படுகின்றது. இவ்வூருக் கருகில் சுமார் 20 மைல் தொலைவில் நேச நாயனுர் திருவவதாரத் தல மாகிய காம்பீலி உள்ளது. இராவணனுல் அசைக்கமுடியாமற் போன மஹாபலேசுவரர் வீற்றிருக்கும் திருக்கோகர்ணமும் கன் னர நாட்டிலுள்ளதே. பல்லாரிக் கோட்டையிலுள்ள திருக்கோயி லில் அறுபத்துமூவர் சரிதம் மதிற்சுவரில் சித்திரமாகப் பொறிக்கப் பட்டுள்ளது. கன்னர நாட்டிலுள்ள நஞ்சன் குடியில் அறுபத்து மூவர் சிலைகள் சிவாலயத்தில் மிகப் பெரிய உருவங்களாக உள்ளன.

அக்காலத்தில் கன்னர தேசம் தமிழ் வழங்கும் நாடாகவே இருந்தது. Caldwell முதலிய ஆராய்ச்சியாளர்கள் கன்னர மொழிக்கும் தமிழுக்கும் உள்ள ஒற்றுமைப் பகுதிகளை விளக்கியுள்ளனர். இற்றைக்கும் கன்னரதேசம் சிறந்த வீர சைவ நாடாகவே திகழ்கின்றது. கோகழியிலும் இன்று வீர சைவ சமயமே விளக்கமுற்றிருக்கின்றது.

கோகழியைப் பற்றிய குறிப்புள்ள சில கல்வெட்டுக்களை இனி ஆராய்வாம். (496/1914) என்ற கல்வெட்டில் கி. பி. 1158-ல் மகா மண்டலேசுவர வீரபாண்டிய தேவன் கோகழி நாட்டையும் சூழ்ந்துள்ள நாடுகளையும் ஆண்டான் என்ற குறிப்புள்ளது. இவ்வாறே 450/1914, 86/1904, 107/1904, 113/1913, 118/1913 முதலிய பல கல்வெட்டுக்களில் கோகழி நாட்டு மன்னர்கள் பாண்டியர்கள் என்றே கூறப்பட்டுள்ளனர். கி. பி. 1087-லும் கி. பி. 1123-லும் ஏற்பட்ட சாசனங்களிற் கோகழி நாட்டிலுள்ள சில கிராமங்கள் திராவிட தேசத்துப் பிராமணர்கட்குத் தானம் செய்யப்பட்ட விவரம் கூறப்படுகின்றது. இது எபிக்ராபிகா இண்டிகா என்ற வெளியீட்டின் 12-வது தொகுதியில் 142 - 155 பக்கங்களில் காணப்படுகின்றது. 441/1914, 443/1914 என்ற கல்வெட்டுக்களில் கோகழியில் மிகப் பிரபலமாகத் திகழ்ந்த மலையாள பண்டிதருடைய சீடர் ஞானேசுவர பண்டிதருடைய சீடர் சோமேசுவர பண்டிதருக்கு நிலம் தானமாகத் தரப்பட்ட விவரம் காணப்படுகின்றது. மேற்கூறிய மலையாள பண்டிதர் லகுலீச குருமரபைச் சார்ந்தவரென்றும் கோகழி நாட்டுப் பெருங்குரவராகத் திகழ்ந்தவரென்றும் கூறப்படுகின்றனர். இன்றைக்கும் பல பழைய மடங்கள் இருந்த குறிப்புக்கள் பல கோகழியிற் காணப்படுகின்றன. மேற்கூறிய கல்வெட்டுக்களிலிருந்து நான்கு விஷயங்கள் தெளிவாகின்றன:—(1) கோகழி நாட்டு மன்னர்கள் பாண்டியர்கள் என்று கூறப்பெற்றமை. (2) கோகழி நாட்டில் திராவிட தேசத்துப் பிராமணர்கட்கு நில தானம் செய்யப்பட்டமை. (3) கோகழி நாட்டில் பல மடங்களும் குருமார்களும் விளங்கியமை. (4) கோகழி நாட்டில் சைவம் நன்றாகப் பொலிவுற்றிருந்தமை.

மாணிக்கவாசகர் காலம் மூவர் முதலிகட்கு முந்தியதென்றும் பிந்தியதென்றும் இரண்டு கொள்கைகள் உண்டு. பிந்தியதாயின் மேற்கூறிய கல்வெட்டுக்கள் பெருந்துணை செய்யும். முந்தியதாயின் கன்னர நாட்டுக்கும் தென்பாண்டி நாட்டுக்கும் தேவார காலத்

துக்கு முந்தியே ஏற்பட்ட தொடர்பு நினைவுகூர்தற்குரியது. பெரிய புராணத்துள் மூர்த்தி நாயனார் புராணத்தில் 11, 12-வது பாடல்களைக் கொண்டு "கானக்கடி சூழ்வடுகக் கருநாடர் காவல்மானப் படைமன்னன்......தமிழ்நாடுடை மன்னன் வீரம் சிந்தச் செருவென்று......மதுராபுரி காவல் கொண்டான்" என்ற செய்தி புலப்படுகின்றது. கல்வெட்டுச் சான்றாலும் இது வலியுறுத்தப்படுகின்றது. (Kalabhara Interregnum) என்று சரித்திர ஆராய்ச்சியாளர் இந்நிகழ்ச்சியைக் குறிக்கின்றனர். பாண்டிநாட்டுக்குள் சமண சமயம் புகுந்ததும் இக்காலத்திலேதான். எனவே தேவார காலத்துக்கு முன்பாகவே பாண்டிநாட்டுக்கும் வடுகக் கருநாடருக்கும் தொடர்பேற்பட்டது ஒப்புக்கொள்ளக் கூடிய செய்தியேயாம். அக்காலத்திலிருந்தே கருநாடர்தேயத்தவர் பாண்டிநாட்டிலும், பாண்டிநாட்டவர் கருநாடர் தேயத்திலும் குடியேறிக் கலப்புற்றிருத்தல் இயல்பு. இவ்வாறு இருநாட்டவரும் கலப்புற்ற பிறகு, திருவாதவூரிலே அவதரித்தவர் மாணிக்கவாசகர். இவர் கன்னர அந்தணர் என்றோ வீர சைவர் என்றோ கொள்ளவேண்டிய அவசியமில்லை. தமிழ்நாட்டு அந்தணர் குடியிலே சைவ சித்தாந்த சமயத்திலே பிறந்தவராகவே கொள்ளலாம். அக்காலத்திய கருநாடர் நாகரிகக் கலப்பில் கோகழி என்ற கருநாடர் தலத்தின் பெருமையும் வரலாறுகளும் வாதவூரடிகளுடைய மனதைக் கவர்ந்திருக்கலாம். அரசனிடம் மந்திரியென்ற முறையில் பல சௌகரியங்களோடு இவர் கோகழி சென்று தரிசித்துமிருக்கலாம். தேவார காலத்துக்கு முன்னும் பின்னும் கோகழி நாட்டுக்கும் பாண்டி நாட்டுக்கும் இருந்த அந்தணர், அரசியல் முதலிய தொடர்புகள், வாதவூரடிகள் பல்லாரி ஜில்லாவிலுள்ள கோகழியைக் குறித்திருக்கலாம் என்ற ஊகம் வலிபெறுமாறு செய்கின்றன.

இதை அற்றுத்தீர்ந்த முடிந்த முடிபாக எவரும் கொள்ளுதல் கூடாது. மேற்கூறியவைகளைத் தத்தம் ஆராய்ச்சியில் வைத்து, உண்மை நோக்குடன் ஒவ்வொருவரும் தெள்ளித் தேறி, நடுநிலை நின்று, வாதவூரடிகள் வழுத்திய கோகழி யாண்டுளதென்பதை யறியுமாறு கோகழியாண்ட குருமணி அருள்புரிக.

## பிரிவாற்ருமை

1. நமது சமாஜ நிர்வாக சபையினருள் ஒருவரும், "நம்பி யாரூரர்" பற்றித் தொடர்ச்சியாகப் பல ஆராய்ச்சிக் கட்டுரை களை நமது பத்திரிகையில் வெளியிட்டவரும், சேலம் ஜில்லா கல்வியதிகாரியுமாகிய திரு: P. தியாகராஜப் பிள்ளை, M. A. L. T. சிவபதமடைந்த செய்தியை மிக்க வருத்தத்துடன் தெரிவிக்கிருேம்.

2. தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத் தொடக்கத்திலிருந்து அதில் உதவிக் காரியதரிசியாகப் பணி புரிந்தவரும், உயர்திரு. மறைமலையடிகளுடைய மூத்த மருமக ஞருமாகிய திரு. வ. திருவரங்கம் பிள்ளையவர்கள் சிவபத மடைந்த செய்தியை மிக்க வருத்தத்துடன் தெரிவிக்கிருேம்.

இவ்விரு பெரியார்களுடைய உறவினர்கட்கும் நமது சமாஜத்தின் பிரிவாற்ருமை புணர்ச்சியை இதன் மூலம் அறிவிக்கிருேம்.

# சமாஜ அறிக்கைகள்

1. நமது சமாஜக் காரியாலயம் கோடை விடுமுறைக்காக 1944ஹு மேமீ 10உ முதல் 10-7-44 வரை மூடப்படும். சமாஜத் துக்கு வரும் கடிதங்கள், மணியார்டர்கள், பத்திரிகை புத்தக ஆர் டர்கள் முதலியன 10-7-44க்குப் பிறகே கவனிக்கப்படும்.

2. நமது சமாஜத்திய கோடை விடுமுறைச் சித்தாந்த வகுப்பை, ராவ்பகதூர்-C. M. இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள் திருநெல்வேலி ஜில்லா அம்பாசமுத்திரம் ஸ்டேஷனிலிருந்து 5 மைல் தொலைவிலுள்ள விக்ரம சிங்கபுரத்தில் மாதவச் சிவஞான சுவாமிகள் சந்நிதியில் 1944ஹு மேமீ 14உ ஞாயிற்றுக்கிழமை மாலை 7½ மணிக்குத் திறந்து வைப்பார்கள். பிறகு நாடோறும் காலையிலும் மாலையிலும் பாபநாசம் திருக்கோயிலுக்கருகில் இவ் வகுப்பு கீழே காணும் முறையின்படி நடைபெறும். காலை 6-7 காலைக்கடன், முழுக்கு 7-8 கோயில் வழிபாடு, 8-8-30 காலை புணவு, 8-30-9-15 வகுப்பு, 9-15-10 தனித்துப் படித்தல், 10-1 வகுப்பு, 1-2 உணவு, 2-3-30 ஓய்வும் தனித்துப் படித்தலும், 3-30-5-30 வகுப்பு, 5-30-7 சிற்றுண்டி, சிறுபணிகள், மாலைக்கடன்;

7-8½ சொற்பொழிவுகள், 8½-9½ உணவு, சம்பாஷணை, இவ் வகுப்பு பெரும்பாலும் 25-5-44ல் முடியக்கூடும்.

வகுப்பில் கற்றற்குரிய பொருள்கள் :—(1) சிவஞானபோதச் சிற்றுரை : திரு. ந. சிவகுருநாத பிள்ளை அவர்கள். திராவிடமாபாடியம் முகவுரையும் சூத்திரம் ஒன்று முதல் ஏழுவரை : திரு. க. வஜ்ரவேல் முதலியார் அவர்கள். எட்டாம் சூத்திரத்திலிருந்து கடைசி வரையில் : திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள். கோயில் வழிபாட்டு முறை முதலியன : இராவ்பகதூர் C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள். சைவசித்தாந்தமும் யோக நூலும், உடல் நூலும் : திரு. டாக்டர் P. V. தேவராஜ முதலியார் அவர்கள். சைவ சித்தாந்தத்தில் சில பகுதிகள் : திரு. ம. பால சுப்பிரமணிய முதலியார் அவர்கள். சைவ சித்தாந்தத்தில் சில உண்மைகள் : திரு. கா. இராமநாதன் செட்டியார் அவர்கள் (இவ்வுண்மைகளை ஆணவத்தை விரட்டல், முகவுரை, பலபலவாம் சமயங்கள், வைதிக சமயத்தின் அடிப்படைக் கொள்கைகள், பாடியம், கடவுள் உண்மை, பசுபாச உண்மை, யாரவர், நானூர், விரோதிகளை வெல்லும் வழி என்ற தலைப்புக்களின் கீழ் விளக்கப்படும்).

# சமாஜ மாதக் கூட்டங்கள்

நமது சமாஜத்தின் ஏப்ரல்மீ கூட்டம் செங்கற்பட்டு ஞானியார் கழக ஆதரவில் 22, 23-4-44ல் ஸ்ரீ ஏகாம்பரநாதர் ஆலயத்தில் மிகச் சிறப்பாக நடந்தது. 22-4-44 சனிக்கிழமை மாலை தலைவர் ஊர்வலமாக வரவேற்கப்பெற்ற பின்னர் இருவர் திருமுறை ஓதினர். கழக அறிக்கையும், சமாஜ அறிக்கையும் தெரிவிக்கப் பெற்றபின், ஸ்ரீ ஞானியார் சுவாமிகள் திருவுருவப் படத்தைத் தலைவர் திறந்துவைத்தனர். பிறகு திரு. வித்வான் வி. குஞ்சிதபாதம் பிள்ளை, ஸ்ரீமதி காஞ்சனமாலை அம்மையார். திருமதி திலகம் மையார் ஆகிய மூவரும் முறையே 'சமய வாழ்க்கையும் அதன் பயனும்', 'திலகவதியார்', 'மங்கையர்க்கரசியார்' என்னும் பொருள்கள் பற்றிப் பேசினர்கள். தலைவர் கருத்துரையுடன் அன்றைய கூட்டம் முடிந்தது. 23-4-44 திருவாளர்கள் C. S. சிவஞான முதலியார், துரைவேலு, திருவேங்கடசாமி, R. சண்முகசுந்தரம் செட்டியார், வித்வான் முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்,

கா. இராமநாதன் செட்டியார், திருமதி A. K. காமாக்ஷி அம்மையார் முறையே 'நாவுக்கரசர் நம்பனை அறிந்த முறை', 'தமிழ் மொழியைப் பேணுதல்', 'மனிதப் பிறவி', பெரிய புராணமும் உளநூலும்', 'சிவவேடம்', 'மரணவித்தை' 'இறைபணி நிற்றல்' என்னும் பொருள்கள்பற்றிப் பேசினார்கள். அவ்வப்போது தலைவர் தக்க மேற்கோள் காட்டி முடிவுரை கூறினார். திருப்பதி தேஸ்தானப் பொருளைச் சமயக் கல்விக்குப் பயன்படுத்த வேண்டுமே தவிர ஒரு புதிய கல்லூரி வைக்கச் செலவிடக்கூடாதென்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. சமாஜ உதவிக் காரியதரிசியும், கழகக் காரியதரிசியும் வந்தனம் கூறினர்.

நமது சமாஜத்தின் மேமீ கூட்டம் அங்கம்பாக்கத்தில் 7-5-44 பிற்பகலிற் கூடிற்று. ராவ்பகதூர் C.M. இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள் தலைமையில் திருமிகு. இளமுருகனார், பு. சு. இராஜேசுவரியம்மையார், பு. ர. சுவாமி நாதனார் ஆகிய அன்பர்கள் முறையே 'பதினொராந் திருமுறை', 'மங்கையர்க்குத் தனியரசி', 'மூவர் கண்ட வாழ்வியல்' என்பன பற்றிப் பேசினார்கள். தலைவர் முடிபுரையும், சமாஜ உதவிக் காரியதரிசி திரு. வே. தியாகராய முதலியார் நன்றி கூறலும், கூட்டத்தைத் தமது செலவில் நடத்திய திரு. அ. மு. பரமசிவானந்தனார் நன்றி கூறலும் முடிந்தவுடன் கூட்டம் நிறைவெய்தியது. காலையில் திருமுறை விழாவும் இரவில் இறைவன் திருவுலாக்காட்சியும் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

நமது சமாஜத்தின் ஜூன் மாதக் கூட்டம் திண்டிவனத்துக் கடுத்த மரக்காணத்தில் உயர்திரு அடிசைகிழார் சிதம்பரனாரவர்கள் தலைமையில் 1944ளு ஜூன்மீ 1, 2-ம் தேதிகளில் நடைபெறும்.

# கணம்புல்ல நாயனரது திருப்பதி

[நாவலர் - ந. மு. வேங்கடசாமி நாட்டார்]

"செந்தமிழ்ச் செல்வி" சிலம்பு - உக, பரல் - ஙல் என்கெழுதகை நண்பர் திருவாளர் - T. V. சதாசிவ பண்டாரத்தாரவர்கள் 'கணம்புல்ல நாயனரது திருப்பதி' என்னும் பொருள் பற்றி எழுதியிருப்பதனைக் கண்ணுற்றேன். பண்டாரத்தாரவர்கள் எழுதுங் கட்டுரைகளை விருப்புடன் படித்துப் புதியன கண்டு, 'பழந்தனம் இழந்தன பரைத்தவரை யொப்ப' மகிழும் வழக்க

முடையேனாகலின், அப்பெற்றியே இதனை விருப்புடன் படித்தேன். ஆயின், இதன்கண், அவர்கள் துணிபு என் கருத்துக்கு இயைய வில்லை. அதனை வெளியிடுவது கடனெனக் கருதி இதனை யெழுது கின்றேன்.

நம்பியாண்டார் நம்பிகள் தாமியற்றிய திருத்தொண்டர் திரு வந்தாதியில் "நன்னகராய இருக்குவே ளூர்தனில்.........எந்தை தந்தைபிரான் எங்கணம் புல்லனே" எனவும், "இருக்கு வேளூர் மன் இடங்கழியே" எனவும் கணம்புல்லர் பதியையும், இடங்கழி யார் பதியையும் இருக்குவேளூர் என்று குறித்துள்ளார். சேக்கி ழார் பெருமான் கணம்புல்லர் பதியைக் குறிக்குமிடத்தில்,

"பெருக்குவட வெள்ளாற்றுத் தென்கரைப் பால்பிறங்கு பொழில்
வருக்கைநெடுஞ் சுளைபொழிதேன் மடுநிறைத்து வயல் விளைக்கும்
இருக்குவே ளூரென்ப திவ்வுலகில் விளங்குபதி"

எனவும் இடங்கழியார் பதியைக் குறிக்குமிடத்தில்,

"மாதவிச் சூழல்,
குருகுறங்கும் கோனாட்டுக் கொடிநகரங் கொடும் பாளூர்"

எனவும் கூறியுள்ளார். மற்றும் அவர் இடங்கழியாரைப்பற்றி,

"அந்நகரத் தினிலிருக்கு வேளிர்குலத் தரசளித்து
மன்னியபொன் னம்பலத்து மணிமுகட்டிற் பாக்கொங்கின்
பன்னுதுலைப் பசும்பொன்னாற் பயில்பிழம்பா மிசையணிந்த
பொன்னெடுந்தோ ளாதித்தன் புகழ்மரபிற் குடிமுதலோர்"

என்று கூறியுள்ளார்.

நம்பியாண்டார் நம்பிகள் கூறியனகொண்டு அப்பதிகள் இன்னவெனத் துணிதல் அருமையே. "ஒரே பெயருடைய பல ஊர்களிருப்பின் அவற்றுள் சிவனடியார் பிறந்தருளிய பேறு பெற் றது யாது என்பதைச் சேக்கிழாரடிகள் மிகத் தெளிவாக விளக்கி யிருப்பது பெரிதும் பாராட்டற்பாலதாகும்" என்று பண்டாரத்தா ரவர்கள் கூறியிருப்பது யாவரும் போற்றத்தக்க உண்மையாகும். சேக்கிழாரடிகளின் வரலாற்றாராய்ச்சியின் தெளிவுக்கும், அவர் தாம் கண்ட உண்மைகளை மயக்கற விளக்கி யருளுதற்கும் இவ்வூர் களைப் பற்றி அவர் கூறியனவே அமையுஞ் சான்றாகும்.

இனி, பண்டாரத்தாரவர்கள் மேலே காட்டிய செய்யுட்களை எடுத்து ஆராய்ந்து, கொடும்பாளூரே இருக்குவேளூராம் எனவும், அதுவே கணம்புல்லர், இடங்கழியார் என்னும் இரு பெரியாரும் பிறந்த பதியாமெனவும் துணிந்துள்ளார்கள். இக்காலத்தில் இருக்கு வேளூர் எனப் பெயரிய ஊர் யாண்டும் காணப்படவில்லையெனக் கொண்டதும், நம்பிகள் அந்தாதியில் இரண்டு பதிகட்கும் இருக்கு வேளூர் என்றே பெயர் கூறியிருப்பதும், பெரிய புராணத்திலே கொடும்பாளூர் அரசராகிய இடங்கழியாரை "அந்நகரத்தினி லிருக்குவேளிர் குலத்தரசளித்தார்" என்பதனுல் கொடும்பாளூருக்கு இருக்குவேளூர் என்னும் பெயருண்மை பெறப்படுதலும் அத்துணிவிற்குக் காரணங்களாகவுள்ளன. வேறு தடையில்வழி இம்முடிபே பொருத்தமுடைத்தாகும்.

இருக்குவேளூர் வடவெள்ளாற்றுத் தென்கரைப்பால் உள்ளதாகத் திருத்தொண்டர் புராணங் கூறுவது இதற்குத் தடையாகின்றது. இதனையும் அவர்கள் எடுத்தாராய்ந்து, 'சிதம்பரத்திற் கண்மையிலுள்ள வெள்ளாறு சேக்கிழாரடிகள் காலத்தில் நிவா என வழங்கி வந்ததென்பது பெரியபுராணப் பாடல்களால் நன்குணரப்படுதலின், அவ்வடிகள் கணம்புல்ல நாயனர் புராணத்திற் கூறியுள்ள வெள்ளாறு வேறு ஓர் ஆருக இருத்தல் வேண்டுமென்பது திண்ணம்? எனவும், 'புதுக்கோட்டை இராச்சியத்திலுள்ள குடுமியாண் மலையில் காணப்படும் கல்வெட்டுக்களால் அவ்வூர்க் சுருகில் வெள்ளாறு என்ற பெயருடைய ஆறு ஒன்று ஓடுகின்றது என்பது புலனுகின்றது' எனவும் கூறி, அதன் மருங்கிலுள்ளதே இருக்குவேளூர் என முடிவு கட்டியுள்ளார்கள். ஈண்டும் வெள்ளாற்றுக்குக் கொடுத்துள்ள வடக்கு என்னும் அடை தடையாகத் தோன்றுதலின், அதனையும் "பாண்டி மண்டலத்து வடவெள்ளாற்றுக் கூற்றத்து ஆத்தம்பூரில்" என்னும் கல்வெட்டு ஆதரவுகொண்டு 'அது பாண்டி நாட்டிற்கு வடக்கு வெல்லையாக இருத்தல்பற்றி அதனை முற்காலத்தில் வடவெள்ளாறு என்று வழங்கியுள்ளனர்' எனக் கூறி மாற்றியுள்ளார்கள். இங்ஙனம் ஒவ்வொன்றும் அவர்களுடைய சிறந்த ஆராய்ச்சியைப் புலப்படுத்தி இன்புறுத்துகின்றன. எனினும், இன்னும் இன்றியமையாத சில செய்திகளை நன்கு சிந்தியாது விட்டமையால் முடிவு தவறியது எனக் கருதுகின்றேன்.

சேக்கிழார் கணம்புல்லர் தோன்றிய பதியை 'வடவெள்ளாற்றுத் தென்கரைப்பால்......இருக்குவேளூர்' என்றும், இடங்கழியார் தோன்றிய பதியைக் 'கோனட்டுக் கொடிநகரங் கொடும்

பாளூர்' என்றும் கூறியுள்ளார். இரண்டு பதிகளும் வேறு வேறும் என்பதனை நன்கு உணர்ந்த தெளிவினாலேயே அவற்றுள் ஒன்றிருக்குமிடத்தை ஆற்றின் சார்பாலும், மற்றொன்றிருக்குமிடத்தை நாட்டின் சார்பாலும் விளக்கியுள்ளார். அன்றியும் வடவெள்ளாறு, தென்கரை என்னுந் தொடர்களை ஊன்றி நோக்கின், தென்கரை வடகரையின் வேறாயதுபோல் வடவெள்ளாறு தென்வெள்ளாற்றின் வேறாயதெனவே பொருள்கொள்ளக் கிடக்கும். கல்வெட்டிலுள்ள 'பாண்டி மண்டலத்து வடவெள்ளாற்றுக் கூற்றம் என்பதில் வடக்கு என்பது கூற்றத்தின் அடையாகலாம். ஆண்டு வெள்ளாற்றுக்கே அடையாயினும் இழுக்கின்று. அதுகொண்டே அதற்கு வடவெள்ளாறு என்று பெயர் கூறுவது அமைவதன்று.

இனி, சிதம்பரத்திற்கு வடக்கிலே ஓடும் ஆறு குறிப்பிட்ட சில இடங்களில் நிவா என்னும் பெயரால் திருமுறைகளில் வழங்கப்பட்டிருப்பினும் அதற்கு வெள்ளாறு என்னும் பெயர் பண்டே உண்டென்பது தேற்றம். தென்னார்க்காடு மாவட்டத்தில் தென் பெண்ணையை அடுத்துப் பெரிய ஆறாகவுள்ளது வடவெள்ளாறே. மணிமுத்தா நதியும் கூடலையாற்றூரில் வந்து அதனுடன் கலந்து விடுகின்றது. கூடலையாற்றூர் என்னும் பெயரின் காரணமும் அதுவே. அருணகிரியார் திருக்கூடலையாற்றூர்த் திருப்புகழில்,

"கூட்டுநதித் தேங்கிய வெளாறு தூளாறுதிகழ்
நாட்டிலுரைச் சேர்ந்தமயி லாவளிதெய் வானையொடு
கூற்றுவிழத் தாண்டியென தாகமதில்வாழ்குமர தம்பிரானே"

எனக் கூறியிருப்பது ஈண்டு அறியற் பாலது.

இனி, பிறிதோருண்மையை அறியின் இவ்வாராய்ச்சி யெல்லாம் இதற்கு மிகையாதல் பெறப்படும். அவ்வுண்மையாவது புதுக்கோட்டைச் சீமையில் ஓடும் வெள்ளாற்றின் தென்கரையில் கொடும்பாளூர் இல்லையென்பதே. வெள்ளாறு புதுக்கோட்டைக்குத் தெற்கில் நான்கு கல் தொலைவில் உள்ளது. கொடும்பாளூர் புதுக்கோட்டைக்கு வடமேற்கில் இருபத்தைந்து கல் தொலைவில் உள்ளது. வெள்ளாற்றிக்கு வடக்கே இருபத்துநான்கு காத வட்டகையுள்ள நிலப்பகுதி கோனாடு எனப்படும். கோனாட்டின் வடபகுதியில் கொடும்பாளூர் உள்ளது. சேக்கிழார் பெருமான் வடவெள்ளாற்றுத் தென்கரைப்பால் இருக்குவேளூர் உள்ளதாகக் கூறியிருத்தலின் அவ்வியாறும், ஊரும் இவற்றின் வேறாயினவென்பது போதரும். சோனாட்டின் தெற்கெல்லையாக ஒரு வெள்ளாறு

அமைந்திருத்தல்போல, வடவெல்லையாக அமைந்துள்ள பிறிதொரு வெள்ளாறே ஈண்டு வடவெள்ளாறு எனப்பட்டதென்க. இவ் வாற்றால் சேக்கிழாரடிகளும் அதனை வெள்ளாறு என ஆண்டுள் ளமை பெற்றாம். வடவெள்ளாற்றின் தென் மருங்கில் பச்சை மலைப் பக்கத்திலே கணம்புல்லர் பிறந்த ஊராகிய இருக்குவேளூர் உள்ளதெனத் தெரிகின்றது. சேக்கிழாரடிகள் ஒவ்வோரிடத்தை யும் நேரிற் சென்று கண்டாங்கு இயற்கை பிறழாமல் வருணனை களையும் அமைத்திருப்பது இறும்பூது விளைப்பதாகும். அவர் இப் பதியினை வளமிக்க மலைச்சாரலில் இருப்பதென்பது புலப்படக் கூறியிருக்கும் செய்யுளைப் படித்து இன்புறுவோமாக.

திருக்கிளர்சீர் மாடங்கள் திருந்துபெருங் குடிநெருங்கிப்
பெருக்குவட வெள்ளாற்றுத் தென்கரைப்பால் பிறங்குபொழில்
வருக்கைநெடுஞ் சுளைபொழிதேன் மடுநிறைந்து வயல்விளைக்கும்
இருக்குவேளூரென்ப திவ்வுலகில் விளங்குபதி

என் இனிய நண்பர் திரு. பண்டாரத்தாரவர்கள் யான் எழு திய இச்சிற்றுரை, அவர்கள் கருத்திற்கு மாறாயினும், உண்மை யொடு பொருந்தியதாயின் அதற்கு உவத்தலே செய்வார்கள் என் னும் துணிபுடையேன். என் உள்ளமும் அவர்களால் நன்கு அறி யப்பட்டதொன்றே.

[குறிப்பு:—இக்கட்டுரை, திரு. நாட்டாரவர்கள் சிவபத மடைவதற்குச் சில நாட்களுக்கு முன்புதான் கிடைத்தது.]

# அப்பரின் தொண்டு

[W. துரைசாமி ஐயர்]

ஆண்டுதோறும் சித்திரை மாதம் சதயநக்ஷத்திரத்தில் நமது அப்பர்மூர்த்திகளுடைய முக்திநாளை நாம் அனைவரும் கொண் டாடுகிறோம். முக்கியமாக அவர் வாழ்க்கையில் நாம் கண்டது யாது? இக்காலத்து பாஷையில் சொல்லவேண்டுமானால், அவர் ஓர் "சுகாதார உத்தியோகஸ்தர்" (Sanitary Officer) என்றே சொல்லவேண்டும். ஏன்? அவருடைய கையில் தாங்கியது உழ வாரப்படை அல்லது மண்வெட்டி தான் பாருங்கள்! எவ்வித

தும்பு தூசி மேடு பள்ளம் இல்லாமல் சமமாயும் தூய்மையாயும் இருக்க உழைப்பவர். நாம் இக்காலத்தில் (Street cleaning) தெரு சுத்தம் என்னும் நிகழ்ச்சியைப் பார்க்கவில்லையா ? அதுதான் அவர் அப்போதே செய்து காட்டினர்! இதுதான் உண்மையான நிஷ்காமசேவையாகும். இதுவே சரியான கர்மயோகம். ஆங்கிலத்தில் (Cleanliness is next to Godliness) என்னும் பழமொழிபோல் பரிசுத்த தூய்மையே பரமசிவனுக்கு வழி காட்டியாகும். ஆகையால் நம்முடைய கோயில் - வீடுகள் முதல் - நம்முடைய உடம்பு ஆடை வரையில் - எல்லாவற்றிலும் - அழுக்கு இல்லாமல் வாழ முயலவேண்டும். இதனால் மனத்தூய்மையும் ஏற்படும். கடவுள் கிருபையும் கிட்டும்.

# ஸ்ரீ சேக்கிழார் பெருமான் பெருமை

**[சமரஸம் சுவைப்போன்]**

ஸ்ரீ சேக்கிழார் பெருமான் எண்ணூறு ஆண்டுகட்கு முன் கோவூருக்கடுத்த குன்றத்தூரிலே நல்லொழுக்கம் சான்ற வேளாளர் குலத்தில் சேக்கிழார் குடியில் அருண்மொழித் தேவர் என்ற பெயரோடு அவதரித்தார். இவர் பெருமையை அறிந்த இரண்டாம் குலோத்துங்க சோழன் என்ற அரசன் இவரைத் தனது முதல் மந்திரியாக்கி இவருக்கு உத்தம சோழப் பல்லவன் என்ற பட்டத்தையும் கொடுத்து நலமுடன் ஆதரித்து வந்தான். சேக்கிழார் பெருமான் அரசனுக்குச் சிவனடியார்கள் பெருமையை எடுத்துக் கூறிச் சுயநல சமயத்திலிருந்து பரநல சமயத்திற்கு உள்படும்படிக்குச் செய்தார். அரசனது வேண்டுகோளுக்கிரங்கி அம்பலவன் கிருபையால் பதின்மூன்று சருக்கங்களாக நான்கு வேதக் கருத்தையும் 4253 பாடல்களில் அமைத்து உலகங்கள் உய்யுமாறு செய்து முடித்தார். "கற்றோர்கள் தாம் உகப்பர் கல்வி தன்னில் ஆசையுள்ளோர் பெற்றோமென வுகந்து பின்பு கற்பர்" என்பதுபோலச் சேக்கிழார் பெருமான் செய்த பெரியபுராணத்தின் பெருமையை ஆயிரம் நாப்படைத்த ஆதிசேஷனும் அளவிட்டுச் சொல்ல முடியாதென்றால் மற்றோரால் சொல்லத் தகுதி?—எல்லா வேதங்களிலும் சிறந்தது சாமவேதம். அதற்கு ரசமாகச் சொல்லப்படுவது ப்ரணவம். அதைப் பூர்வமாகக் கானம் பண்ணப்படுவது

உத்கீதம். அந்த உத்கீத அவயவமான ப்ரணவத்தைச் சாந்தோக்கியந் தன்னில் முதலில் எடுத்தாற்போல, இங்கும் முதல் பாட்டில் ப்ரணவத்தை எடுத்து எல்லாம் மங்களகரமாகவே அமைத்து மங்களங்களுக்கெல்லாம் மங்களத்தைத் தரும் பிராட்டி உமாதேவி அக்ஷரமான 'உ' என்ற முதல் எழுத்தை அமைத்து அந்த 'உ'காரத்தை 'அ'லகில் சோதியன் என்ற ஈஸ்வர வாக்கியமாகிய 'அ'காரத்துடன் சேர்த்துக் காதலாகிய அன்பின் காட்சியைக் காட்டி அதிலிருந்து "பெற்று உகந்தது கந்தனையே" என்ற ஆனந்தத்திற்கு உடலாக 'ம'காரமாகிய மலர் சிலம்படி என்ற வாசகத்தைச் சேர்த்து 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்றதுபோல் ப்ரணவத்தை முதல் பாட்டில் வெகு அழகாகச் சிறப்பித்துக்காட்டப்பட்டிருக்கிறது. அந்த முதல் பாட்டின் அர்த்த விசாரங்கள் மற்றப் பாட்டுக்களில் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

2. 'மாத்ருதேவோ பவ, பித்ருதேவோ பவ, ஆசார்யதேவோ பவ, அதிதிதேவோ பவ என்ற உபநிஷத் வாக்யங்கள்போல் 'மலர் சிலம்படி' என்று முதல் பாட்டில் மாதாவையும், 'வரதர் பொற்றாள்' என்று இரண்டாம் பாட்டில் பிதாவையும், 'நமக்கருள் செய்திட' என்று மூன்றாம் பாட்டில் ஆசாரியனையும் 'நாயன்மார்' என்று நான்காம் பாட்டில் 'அதிதி'களையும் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆசாரியன் ஸ்வரூபத்தால் ப்ரணவார்த்தமென்றும், ஐந்து ஞானக் கை என்றும் தாழ் செவி என்றும் நீள்முடி என்றும் யானைக்கு ஒப்பிட்டுக் குணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ப்ரணவார்த்தம் அ. உ. ம. என்று அதாவது ஈஸ்வரன் பிராட்டி ஜீவன் என்னும் மூன்று பொருளைக் குறிக்கிறது. ஐந்து ஞானக் கை என்பது. ஈஸ்வர நிலை, ஜீவ நிலை - புருஷார்த்த நிலை-தக்கநெறி - தடை. இவை ஐந்தையும் உபதேசிக்கப்படுவதைக் குறிக்கிறது. இதைத்தான் பஞ்சமூர்த்தி உத்ஸவம் என்றும் சொல்லப்படுகிறது. "தாழ் செவி" என்று கருணையில் தாழ்மையும் "நீள்முடி" என்று பரத்வத்தில் உயர்வும் காட்டப்படுகிறது. கடக்களிறு என்பது எப்படி யானை தன் பாகனைத் தன்மேல் வைத்துக்கொண்டு அவன் சொல்படி நடக்குமோ அவ்விதம் ஈஸ்வரனாகிய ஆசாரியனும் தன் அடியார்க்கு எளியவன் என்பதைக் குறிக்கிறது. நாயன்மார் ஸ்வரூபம் "கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார், ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார், கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி, வீடும் வேண்டா விறலின் விளங்கினார்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அடியார்களை ஆதரிப்பதுதான் புருஷார்த்த

மென்றும் அதனால் குடி முழுதும் உய்து நல்ல பதத்தால் மனைவாழ்வர் என்ற பலன் ஏற்படுகிறது.

3. ஸ்ரீ சேக்கிழார் "வேதநெறி தழைத்து ஓங்க மிகு சைவத் துறை விளங்க, பூத பரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத. சீத வளவயற் புகலித் திருஞானசம்பந்தர், பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்" என்று லோகத்தை நீதி முறையில் வாழ்விக்க வேண்டுமென்ற கருத்துடன் நான்கு வேதத்தையும் கடைந்து அதன் உட்பொருளைச் செந்தமிழில் எளிய நடையில் யாவரும் கற்று உணரும்படிக்குப் பெரியபுராணமாகச் செய்தருளினார். இப்புராணத்தில் ஈடுபட்டவர்கள் வேறு எந்த நூலையும் துணை தேட வேண்டியதில்லை. எல்லாச் சாரங்களும் தத்துவங்களும் இதிலே பரிபூர்ணமாய் அடங்கியிருக்கின்றன.

4. வடமொழி வேதத்தில் அறியாத விஷயங்களை எல்லாம் தமிழ்மொழி வேதத்தில் அறிகிறோம் என்று ஒரு வைணப் பெரியார் உபய வேதாந்தமும் வேண்டியது அவசியம் என்று எடுத்துக் காட்டியதுபோல, வைணவத்தில் அறியாத சில தத்துவங்கள் சைவத்தில் காட்டப்பட்டிருக்கின்றன. இரண்டு சமயத்தையும் சேர்த்துப் பார்த்தால்தான் "ஒற்றுமை கொண்டது என் உள்ளம்" என்பதுபோல் பிளவு ஏற்படாமல் உபய சித்தாந்தம் என்று— ஒற்றுமை ஏற்படும்.

5. ருக் வேதத்தில் "ஏகம் சத்விப்ரா பஹுதா வதந்தி" என்று சத் ஒன்றே என்றும், உபநிஷத்தில் "பதிம் விஸ்வஸ்யாத் மேஸ்வரம் சாஸ்வதம் சிவம் அச்யுதம்" என்று பிரபஞ்சத்திற்கும் எல்லா ஆத்மாக்களுக்கும் நாயகனும் ஜனன மரண மில்லாதவனும் மங்களகரனென்றும் அடைந்தவர்களை நழுவ விடாதவன் என்றும், தமிழ் வேதங்களில் ஊழி முதல்வன் ஒருவனே என்றும் எல்லாம் உடைய ஈசனே இறைவனென்றும் பொதுவான நிலைமையில் ஈசனைக் கூறியுள்ளன. ஐந்து விரல்கள் சேர்ந்தால் மட்டும் தொழில் நடக்குமாபோல், ஐந்துபூத ஐக்கியம்தான் ஞானச்சுடர் என்றும் சோதி என்றும் அம்பலத்தில் ஆடுவான் என்றும் சொல்லப்படுகிறது. பூதங்களைப் பிரித்துப் பார்க்கும்போது ஜலம் குளிர்ச்சியாயும், அக்கி உஷ்ணமாயும் வாயு பலமாயும் பூமி பொறுமையாயும் ஆகாயம் ஓசையாயுமிருந்து வருகிறது. வாயு - ஆகாயம் பூமி இவைகளைப் பற்றி விவகாரமே இல்லை. ஜலத்தைப் பற்றியும் அக்கியைப் பற்றியும்தான் வைணவம் சைவம் என்று விவரித்து வாதிக்

கப்படுகிறது. காதலி காதலன்போல் ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்திருக்க முடியாத தன்மையில் அரவணைத் துயின்ற ஆழியான் என்றும் நீர்மலி வேணியன் என்றும் சேர்ந்தே பேசப்பட்டும் வழிபட்டும் வரப்படுகிறது. வலத்தனன் திரிபுரம் எரித்தவன் என்றும் மாலுமோர் பாகம் கொண்டான் என்றும் ஒற்றுமையில் சிவபிரான் அவனே என்றும் செங்கண்மால் தானே கண்டாய் என்றும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. அனுஷ்டானத்தில் கவனித்தால் இருவர் பக்கமும் இலச்சினை ஏற்பட்டிருக்கிறது. இலச்சினை ஸ்வரூபத்தைக் கவனித்தால் ஆழியும் சங்கும் திரிசூலமும் விடையுமாக ஏற்பட்டிருக்கிறது. ஆழி அக்கி ஸ்வரூபத்தையும் சங்கு ப்ரணவமாகிற விக்னேஸ்வரர் ஸ்வரூபத்தையும், திரிசூலம் நாமமாகிற ப்ரணவார்த்தத்தையும் செங்கண்மால் விடையுமான திருமாலையும் குறிக்கிறது. திருநீற்றைக் கவனித்தால் "சீலமுடைய கோக்குலங்கள் சிறக்கும் தகைமைத் தேவருடன், கால முழுதும் உலகனைத்தும் காக்கும்முதற் காரண மாகும் நீலகண்டர் செய்ய சடை நிருத்தர் சாத்து நீறுதரும் மூலம் அவதாரம் செய்யும் மூர்த்தம் என்றால் முடிவென்னே" என்று பெரிய புராணத்தில் கூறப்படுகிறது. "ஆனில் மேய வைந்தும்நீ அவற்றுள் நின்ற தூய்மைநீ" என்று வைணவத்தில் சொல்லப்படுகிறது. இதனால் திருமாலே திருநீறாகவும் அதை அடியவர் மேனிமேல் நிரந்த நீற்றொளி "ஆயிரம் பாற்கடல் போல்வது என்று இருப்பதாலும் அதை அனுசரித்துப் பாற்கடலில் திருமால் பள்ளிகொள்ளும் பாவனையில் அணிந்து வருவதால் புறம் வைணவம் என்றும் அகம் சைவம் என்று சைவர்க்கு விளங்குவது. திருமண் அடியார் பாததூளி என்றும் திரிசூலமாகவும் வைணவர்கள் அணிந்து வருவதால் புறம் சைவம் என்றும் அகம் வைணவம் என்றும் விளங்குவது, "முகமலர அக நெகிழ அன்பின் நினைந்தனை யல்லால் அறிவுறு மொழிநல்ல" என்பதுபோல உள்ளும் புறமும் ஒத்தேயிருப்பன இரண்டும். "திருநீற்றொளி ஆயிரம் பாற்கடல் போல்வது" என்று ஸ்ரீ சேக்கிழார் பெருமான் வாக்கியத்திலிருந்து அவருக்குப் பாற்கடலில் பள்ளிகொள்ளும் திருமாலிடத்தில் எவ்வளவு ப்ராவண்யம் இருக்கும் என்பதும் புனலுருவாய் அனலுருவில் திகழும் சோதி என்று திருமங்கை ஆழ்வார் வாக்கிலிருந்து அவருக்கு அனலுருவாகிய சிவபெருமானிடத்தில் எவ்வளவு ப்ராவண்யம் என்பதும் ஸ்ரீ மாணிக்கவாசகப் பெருமான் "நீலஉருவில் குயிலே நீண்மணி மாட நிலாவும் கோலஉருவில் திகழும்கொடி மங்கையுள்ளுறை

கோயில் - ஞாலம் விளங்க விருந்த நாயகன் " என்ற வாசகத்தி விருந்து நீல உருவாகிய திருமாலிடத்தில் எவ்வளவு ப்ராவண்யம் என்பதும் இதனுல் நன்கு விளங்கும். நம்மாழ்வார் ஏறுளும் இறை யோனுந் திசை முகனும் திருமகளும் கூறுளும் தனி உடம்பன் என்றார். சுந்தரர் " வையகம் முழுதுண்ட மாலோடு நான்முகனும் பையின் அரவல்குல் பாவையோடும் உடனே கொய்யளி மலர்ச் சோலை கூடலையாற்றூரில் ஐயன் இவ்வழிபோந்த அதிசயம் அறி யேனே " என்றார். இதனுல் வஸ்து ஒன்று பலவிதமாக விளங்கு வதும் முடிவில் அந்த வஸ்துவிடத்தில் எல்லாம் ஒடுங்குவதுமாய் இருக்கிறது. இவ்விதம் மாறிமாறி தோற்றமும் அழிவும் ஈசன் ஆக்ஞை என்று அறிவதுதான் ஞானம் என்றும் அதன்படி நடப் பதுதான் செயல் என்றும் அறிந்து வாழ்ந்தோம் காண் என்று பொருமையும் பற்றுமில்லாமல் சமரஸமாய்க் கூடி வாழ்வதே வாழ்க்கை என்று ஒவ்வொரு சமயமும் " ஓதுவார் ஒத்தெல்லாம் " எவ்வுலகத்து எவ்வெவையும் சாதுவாய் நின்புகழின் தகையல்லால் பிறிதில்லை என்றும் அறுதியிடப்படுகிறது.

6. தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன் என்ற அந்தணனுகி யாகிய சைவ தன்மை (சத்) வந்தால்தான் திருநீல கண்டத்துக் குயவனுர்க்கு அடியேன் என்ற வைணவத் தன்மை (உயர்வு அற எல்லாம் சத்) என்ற ஞானம் ஏற்படும். அப்போதுதான் ஆவின் பெருமை உள்ளபடி அறிந்து ஆயற்கருள் செய்யும்படி நேரிடும். அதுதான் கிருஷ்ணன் பிறப்புபெற்றம் மேய்த்து உண்ணுங் குலம். அது உத்தம லக்ஷணம் என்று கிருஷ்ணனை வழிபடுகிருர்கள். பசு பதி என்று கூறப்படுவதை நோக்குக.

(தொடரும்)

---

Editor : M. Balasubrahmanya Mudaliar, B. A., B. L.

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah, by T. V. Volaganathan (Publisher) for the Saiva Siddhanta Maha Samajam, at 51, Thengur Chelvavinayagar Koil Street, Mylapore, Madras.